**தலைப்பு - 124 - சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன சமூக வலுவூட்டல் மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 124 - சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சமூக வலுவூட்டல் நலன்புரி, மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 மற்றும் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி நடவடிக்கைகளும் திட்டமிடப்பட வேண்டும். | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை. | 2.5 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.4(அ) – (இ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு எல்லையினை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல். | 2.1(அ)(ii) |

கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல்

**2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கமைய அல்லாது 23 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 221 மில்லியன் நிதியேற்பாடு ரூபா 23 மில்லியனை விஞ்சி ரூபா 244 மில்லியன் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**2.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 02 ஆண்டுகள் காலப்பகுதியினுள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2016** | மீண்டுவருபவை | 11,791 | 11,383 | 407 | 3 |
| | மூலதனம் | 255 | 239 | 17 | 7 |
| | **மொத்தம்** | **12,046** | **11,622** | **424** | **4** |
| **2017** | மீண்டுவருபவை | 12,153 | 11,787 | 365 | 3 |
| | மூலதனம் | 754 | 343 | 412 | 55 |
| | **மொத்தம்** | **12,907** | **12,130** | **777** | **6** |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

11 செலவின விடயங்களுக்காக ரூபா 435,976,929 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையாலும், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 295,298,491 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டமையால் சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதுல் 79 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

அமைச்சிற்குரிய 12401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 24.00 | 23.87 | 7.00 | 18.49 | 70.00 | 49.33 |

## 2.4 முகாமைத்துவ நலிவுகள்

### (அ) மூப்புக் கொடுப்பனவினை வழங்குதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மீளாய்வாண்டினுள் குறைந்த வருமானம் பெறும் வயோதிபர்கள் 386,080 பேருக்காக ரூபா 2,000 தொகையான படியினை செலுத்துவதற்கு ரூபா 9,265.92 மில்லியனை நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 375,317 வயோதிபர்களுக்கே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 10,763 வயோதிபர்களுக்காக செலுத்த வேண்டியதாக இருந்த ரூபா 258.31 மில்லியனான தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii). மீளாய்வாண்டின் நவம்பர் 06 ஆந் திகதி தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த வயோதிப படிகளை செலுத்துதல் தாமதமடைந்துள்ளதாகவும், உரிய காலப்பகுதியினுள் கொடுப்பனவினை செலுத்தப்பட வேண்டும் என்பதும் அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்த போதிலும், அதன் அடிப்படையில் செயற்படாமையால் **(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள சேமிப்பு அவதானிக்கப்பட்டது.**

### (ஆ) அங்கவீனக் கொடுப்பனவினை வழங்குதல்

மீளாய்வாண்டினுள் குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற நபர்கள் 30,654 பேருக்காக படிகளை செலுத்துவதற்கு ரூபா 1,103.54 மில்லியனை நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 30,077 அங்கவீனமுற்ற நபர்களுக்காக மாத்திரமானமையால், 577 அங்கவீனமுற்ற நபர்களுக்காக செலுத்தக்கூடியதாக இருந்த ரூபா 20.75 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) சிறுநீரக மானியங்களை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது 09 மாவட்டங்களினுள் இனங்காணப்பட்ட சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை 19,645 பேராக இருந்ததுடன், மே மாதத்தின் போது அந்த நோயாளிகளின் எண்ணிக்கை 21,500 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறெனினும், திசெம்பர் மாதமளவில் சிறுநீரக நோயாளர்கள் 19,010 பேருக்கு மாத்திரம் உதவு தொகைகள் செலுத்தப்பட்டமையால், உதவிகளை எதிர்பார்த்திருந்த 2,490 உதவியாளர்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அமைச்சினால் சிறுநீரக நோயாளர்களின் காத்திருப்போர் பட்டியல் மாதாந்தம் அல்லது மூன்று மாதங்களுக்கு தயாரிக்கப்படாமையால், ஆண்டின் இறுதியில் சிறுநீரக நோயாளர்களுக்கு பகிர்ந்தளிக்க இருந்த ரூபா 38,458,200 தொகையான உதவு தொகைகள் குறைப்பயன்பாட்டுடன் நிலவியது.

(ii). சமூக சேவைகள் அமைச்சின் செயலாளரால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5 ஆம் பந்திக்கமைய பாரதூரமாக சிறுநீரக நோய்க்குட்பட்டுள்ள நோயாளர்களுக்காக வாழ்வாதார கொடுப்பனவுகள் ஒவ்வொரு மாதமும் 10 ஆந் திகதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே கொடுப்பனவு பதிவேட்டில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று உரிய மாதத்தின் 31 ஆந் திகதிக்கு முன்னர் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ள போதிலும், 09 மாவட்டங்களில் அவ்வாறான பதிவேடுகள் மாதாந்தம் வருவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

1978 இன் திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,264,240 தொகையான 02 சொத்துக்கள் மற்றும் ஆண்டினுள் நிர்மாண பெறுமதியான ரூபா 51,690,000 நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சின் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 229 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய நபரொருவருக்கான செலவினம் ரூபா 538,912 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 51 | 32 | 19 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 06 | 07 | - | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 473 | 314 | 159 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 84 | 72 | 12 | - |
| | மொத்தம் | 614 | 425 | 190 | 01 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசனை உதவியாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் (மதியுரையாளர்) பதவி வெற்றிடங்கள், வெளிவாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து ஆட்சேர்ப்பதற்காக 2017 பெப்ரவரி 15 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2017 செப்தெம்பர் 17 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் (மதியுரையாளர்) பதவிக்காக 224 மற்றும் இணைந்த சேவைகள் வகுதியில் மதியுரை உதவியாளர் பதவிகள் 100 இனை உள்ளடக்குவதற்கு அமைவாக மனிதவள ஆலோசகர் உத்தியோகத்தர்கள் 324 பேரை இணைத்துக் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஆட்சேர்ப்பு நடைமுறை நிறைவு செய்யப்பட்டு வரைபு தயாரிக்கப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதிலான தாமத நிலைமையொன்று காணப்பட்டமையால் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் இந்த ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

**(ஆ) பதவியணியை பயிற்றுவித்தல்**

மீளாய்வாண்டிற்கு மதியுரையாளர் பிரிவில் 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 1,400,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பங்குபற்ற வேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை முறையே 214,116 மற்றும் 214 ஆன போதிலும், அதன் போது 04 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடடாத்தப் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை முறையே 20, 13, 121 மற்றும் 38 ஆகும். அதற்கமைய, ரூபா 1,420,000 செலவினம் மேற்கொள்வதன் மூலம் குறைவான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை பயிற்றுவிப்பதற்கு அதிகளவான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.